OS.61/2022

**நாள். 10.07.2025.**

**பி.வா.சா.1 – சத்யா**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

என் கணவர் பெயர் தாமரை செல்வன். என் மாமனார் பெயர் முருகானந்தம் என்றால் சரிதான். என் மாமனாருக்கு இராமநாதபுரம் கண்ணகி தெருவில் ஒரு பூர்வீக வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் தான் நானும், என் கணவரும் குடியிருந்து தற்போது பட்டிணம்காத்தான் வடக்கு தெருவில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். கண்ணகி தெருவில் என் மாமனாருக்கு உள்ள பூர்வீக வீட்டிற்கு எதிர்புறம் வாதி வீடு உள்ளது என்றால் சரிதான். பட்டிணம்காத்தான் வடக்கு தெருவில் உள்ள வீட்டிற்கு நீதிமன்றத்திற்கு பின்புறம் கடம்பா நகர் வழியாக சென்றுவிடலாம் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் நீதிமன்றத்திற்கும் 200 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் உடல் ஆரோக்கியத்துடன் நான் உள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5–ஐ நான் இதற்கு முன்பு பார்த்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் இன்றுதான் இந்த ஆவணத்தை பார்க்கிறேன். நான் எங்கள் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். வா.சா.ஆ.5 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்களைத்தான் நான் என்னுடைய நிரூபணவாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. வாதி 21.07.2021ம் தேதியிட்டு ஒரு அறிவிப்பு எனக்கு அனுப்பியிருந்தார் என்றும் அதை நான் 22.07.2021ல் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். 06.08.2022ம் தேதி வாதி தாவா வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் நான் வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு 06.09.2022 தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

வாதி இவ்வழக்கை தாக்கல் செய்து எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு அதை நான் பெற்றுக்கொண்ட பின்புதான் வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் 08.09.2022 ம் தேதி வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்து ஆஜர் ஆனேன் என்றால் சரிதான். நான் வாதி கோரியுள்ள பரிகாரத்தை கொடுக்காமல் காலதாமதம் ஆவதற்காக இரண்டுமுறை எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவுக்கு விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் 12 ம் வகுப்பு முடித்துள்ளேன். என் கணவர் டிப்ளமோ படித்துள்ளார். என் கணவர் கான்ட்ராக்டர் வேலை பார்த்து வருகிறார். எந்த வருடம் முதல் என்றால் தெரியாது. நான் என் கணவருக்கு ஒப்பந்த தொழில் செய்வதற்கு பொருளாதார ரீதியாகவும், வரவு செலவு கணக்கு பார்ப்பதிலும், ஆவணங்களை படித்துப்பார்த்து சரிபார்ப்பதிலும் உதவியாக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2018, 2019 ல் தோராயமாக எங்கள் வீட்டில் எவ்வளவு பணம் இருந்தது என்றால் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டிருந்தது. எவ்வளவு பணம் இருந்தது என்றால் தெரியாது. 2018, 2019, 2020 வருடங்களுக்கு முன்பு என் கணவர் ஏதாவது டென்டர் எடுத்துள்ளரா என்றால் எடுத்துள்ளார். மண்டபம் பஞ்சாயத்தில் சாலை போடுவதற்கு டென்டர் எடுத்துள்ளார். அவ்வாறு டென்டர் எடுக்கும்போது சொந்த பணத்தை போட்டுதான் வேலை செய்யவேண்டும் பின்னிட்டுத்தான் அரசாங்கம் பணம் கொடுக்கும் என்றால் சரிதான். வாதிக்கு நான் அடமானமாக எழுதிக்கொடுத்த சொத்து என் பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த அடமான பத்திரம் 12.10.2020 ம் தேதி எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அடமான பத்திரத்தில் வாதியிடம் வாங்கியது ரூ.25 லட்சம் என்றும் அந்த தொகையை என் தொழில் அபிவிருத்திக்காகவும், அவசிய தேவைக்காகவும் வாதியிடம் நேரில் ரொக்கம் பெற்றுக்கொண்டேன் என உள்ளது என்றால் சரிதான், ஆனால் நான்நேரடியாக பணம் பெறவில்லை. அந்த தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 100-க்கு 2 சதவீதம் வட்டிவீதம் மூன்று வருடத்தில் செலுத்திவிடுவதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளேன்

என்றால் சரிதான். அவ்வாறு செலுத்தாகபட்சத்தில் அடமான சொத்தின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னேன் என்றால் சரிதான். அந்த அடமான பத்திரம் எழுதிக்கொடுத்த அன்று யார்யார் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் எங்கள் தரப்பில் நானும், என் கணவரும் சென்றோம். சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் காலை சென்றோம், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு நேரம் கொடுக்கவில்லை என்பதால் வீட்டிற்கு வந்துவிட்டு மாலை தான் திரும்பவும் சென்றோம். அடமான பத்திரம் எழுதுவதற்கு எனது ஆதார் கார்டு வாங்கி தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். அடமான பத்திரம் எழுதுவதற்கு ரூ.20 ஆயிரம் மதிப்பில் ஒரு முத்திரை தாளும், ரூ.,ஆயிரம் மதிப்பில் 5 முத்திரை தாளும் வாங்கியுள்ளோம் என்றால் ஞாபகமில்லை. அப்போது என்னுடன் என் கணவர், வாதி, வாதியின் பேரன் யுவராஜ் ஆகியோர் இருந்தோம் என்றால் சரிதான். வேறுயார் இருந்தார்கள் என்றால் இல்லை. நான் பணத்தை வாங்கிக்கொண்டுதான் பத்திரத்தை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் எழுதிக்கொடுத்த அடமானப் பத்திரத்தில் என் கணவர் 1 வது சாட்சியாகவும், வாதியின் பேரன் யுவராஜ் 2 வது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளனர் என்றால் சரிதான். அடமான பத்திரம் பதிந்த அன்றே என் பெயரில் 08.10.2018 ம் தேதி ஏற்பட்ட கிரைய பத்திரத்தை (வா.சா.ஆ.2) வாதியிடம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். என் கணவர் பெயரில் சொத்து உள்ளதா என்றால் இல்லை. 2020–ல் என் கணவர் பெயரில் எந்த சொத்தும் இல்லை என்பதால்தான் என் பெயரில் உள்ள சொத்தை அடமானமாக வைத்து ரூ.25 இலட்சம் என் கணவருக்கு வாங்கிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் பதில் அறிவிப்பு, எதிர்உரையில் வாதி வட்டித்தொழில் செய்து வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதி வேறுயாருக்கு வட்டி கொடுத்திருக்கிறார் என்றால் தெரியும், பெயர் தெரியாது. வாதி ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். வாதி அரசு ஊழியராக இருந்து ஓய்வு பெறும்போது ரூ.12 இலட்சம் ஓய்வூதியமாக பெற்றார் என்றால் தெரியாது. ஓய்வுக்கு பிறகு

ரூ.45 ஆயிரம் மாதம் பெறுகிறார் என்றால் தெரியாது. வாதிக்கு வீட்டு வாடகை மூலம் மாதம் ரூ.9 ஆயிரம் வருமானம் வருகிறது என்றால் தெரியாது. கண்ணகி தெருவில் உள்ள வாதி வீட்டு சொத்தின் மதிப்பு ரூ.2 கோடி இருக்கும் என்றால் தெரியாது. 12.10.2020ம் வாதிக்கு அடமான பத்திரம் எழுதிக்கொடுதத பிறகு அவரை பார்த்துள்ளேனா என்றால் அவர் என் வீட்டிற்கு பலமுறை வந்து பணம் கேட்டு தொந்தரவு செய்துள்ளார். நான் வாதியிடம் பலமுறை போனில் பேசியுள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா என்ன வேலை செய்கிறார் என்றால் எந்த வேலையும் செய்யவில்லை. என் அப்பா ராஜேந்திரன் வாதிக்கு ஒரு கடன் உறுதி பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கடன் உறுதி பத்திரம் சம்மந்தமாக இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.70/2022 என வழக்கு உள்ளது என்றால் சரிதான். கடன் உறுதி பத்திரம் என் அப்பா ஆதார் கார்ட் வைத்து எழுதப்பட்டுள்ளது என்றால் என் அப்பாவிற்கு எழுதப்படிக்க தெரியாது. எழுதாக வெள்ளைப்பேப்பரில்தான் கையெழுத்து போட்டேன்.

(நேரமில்லை என்பதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.